**31-12-2011** | *வருட இறுதித்தொழுகை*

# கடவுளில் நம்பிக்கை கொள்ளுங்கள்

**TRUST IN THE LORD**

வி.ப. 33:12-23 | 1தெச. 5:23,24

தி.பா. 90:136; 1-9; 23-26 | லூக். 12:22-34

*"சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்சவேண்டாம்." லூக். 12:32*

**மன்றாட்டு : *என்றென்றும் வழிநடத்தும் கடவுளே, அனைத்து படைப்பிற்கும் ஆதாரமானவரே எமது காலங்கள் உமது கரத்தில் உள்ளன. வாழ்வின் அனைத்து நெருக்கடியான நிலைகளிலும் உயர்வான உம் ஆசிகளை தினமும் எங்கள் வாழ்வில் அனுபவிக்க வாய்ப்பருளினீர். எங்கள் நம்பிக்கையினை முழுமையாய் உம்மில் வைத்து வாழ்வு தொடரவும், நிலைவாழ்வுக்கு ஆயத்தப்படவும் எம்மை வலுப்படுத்த என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். - ஆமென்.***

ஒருநாள் அதிகாலை நேரம் மருத்துவமனை அறுவை சிகிச்சை அறைக்கு முன்னால் பெருங்கூட்டம் மக்கள் நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது அறுவை சிகிச்சை மருத்துவர் குழு ஒருவருக்கு மூளையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தது. திடீர் என்று அறுவை சிகிச்சை கதவு திறந்தது. மருத்துவர் ஒருவர் வெளியே வந்தார். கூடியிருந்தவர்களிடம், நாங்கள் எங்கள் கடமையை செய்துவிட்டோம். நீங்கள் கடவுளிடம் வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். கடவுளிடம் கொள்ளும் நம்பிக்கை மட்டுமே மனிதசக்திக்கப்பால், மனிதனை சக்திபடுத்த வல்லது. உறுதியாய் நிற்க வைக்க வலு வாய்ந்தது. கடவுள் நம்பிக்கை மனித வாழ்வில் அருளியுள்ள ஆசீர்வாதங்கள் ஈண்டு காண்போம்.

## *1. கரத்தினால் மூடுவதை அனுபவிப்பர்*

இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து மீட்க இறைவன் பயன்படுத்தியவர் மோசே. இஸ்ரவேல் மக்கள் சமூகத்தை உலகறியச் செய்த பெருமைக்குரியவர். திருச்சட்டங்கள் இவர் மூலம் மானுடச் சமூகத்திற்கு தரப்பட்டது. மோசே கடவுள் நம்பிக்கையுடையவராய் வாழ்ந்தார். ஒருவன் தன் சினேகிதனோடே பேசுவது போல கர்த்தர் மோசேயோடே பேசினார். (யாத் 33 : 11 ) நெருங்கிய உறவில் வாழ்ந்த மோசே, கடவுளிடம் நம்பிக்கை

கொண்டு வாழ்ந்ததுடன், நம்பியவருடன் பயணிக்க விரும்பினார் (யாத். 33:15). மோசே கடவுளிடம் அவருடைய மகிமையை காணவேண்டும் என்னும் தன்னுடைய விருப்பை தெரிவித்தார். கடவுள் மோசேயைப் பார்த்து நீ என் முகத்தை காணமாட்டாய். என் மகிமை கடந்து போகும் போது என்கரத்தினால் உன்னை மூடுவேன் என்றார் (யாத். 33:22) நம்பிக்கை கொண்ட மோசே கடவுளின் கரத்தை காணும் பேற்றையும், அவர் தொடும் தொடுதலையும் அனுபவித்தார்.

இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட சீடர்கள் கூட்டம் வாழும் இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வதிக்கும் கரங்கள் கண்டார்கள். அவர்தம் அடியவர்கள் பெத்தானியாவரைக்கும் அழைத்துக்கொண்டு போய் தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். (லூக் 24 : 50) ஆபத்துகளும், பாடுகளும், மரணமும், மானுடத்தை விட்டலாத மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எல்லாவேளைகளிலும் கிறிஸ்துவிடம் நம்பிக்கை வைத்திருந்தால் அவர் நம்முடனிருப்பதையும், அவர் நம்மை மூடிக்கொண்டிருப்பதையும் உணர்வோம். அனுபவிப்போம். நம்பிக்கையில் பெலப்படுவோம்.

## 2. கடவுளின் விடுதலையை அனுபவிப்போம்

கர்த்தரை நம்பினோர் கர்த்தர் மூலம் வருகின்ற விடுதலையை சொந்தமாக்கினார்கள். சங்கீதக்காரர் தாவீது குறிப்பிடுகையில் எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள். நம்பின அவர்களை நீர் விடுவித்தீர் என்கின்றார் (சங். 22:4) யோபு பாடுகளை அனுபவித்த மனிதர். பாடுகள் மிகுந்த வேளையில் அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் (யோபு 13:15) என்றார். யோபுவின் வாழ்ந்து அழிந்து போகவில்லை. இருள் அகன்று, கடவுளால் விடுவிக்கப்பட்டு மகிழும் வாழ்வை சொந்தமாக்கினார் (யோபு 42:12 ). ஏசாயா குறிப்பிடுகையில் தேவனே என் இரட்சிப்பு நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன். கர்த்தராகிய யெகோவா என் பெலனும் என்கீதமுமானவர், அவரே எனக்கு இரட்சிப்புமானவர் என்கின்றார் (ஏசா. 12:2).

இயேசு கிறிஸ்துவின் மானுடம் வைக்கும் நம்பிக்கை மரணத்தினின்றும் நம்மை விடுவிக்குமென்று தூய பவுலார் குறிப்பிடுகின்றார். (கொரி. 1:10) மக்களை, மக்களும், மக்களுடைய, செல்வமும், ஆற்றலும் விடுவிக்குமென்று மக்கள் நம்புகின்றனர். ஆனால் ஒரு எல்லைக்கு அப்பால் அனைத்தும் இழந்துபோகின்றனர். எனவே வாழும் காலத்தில் கடவுளில் நம்பிக்கை வைத்தால், மக்களால் விடுவிக்க முடியாத இடத்தில் கடவுள் நம்மை விடுவிப்பார். படைப்புக்களும் விடுவிக்கப்படும்.

## 3. கடவுள் நம்பிக்கையால் கவலையின்றி வாழ்தல்

மனிதவாழ்வில் மனிதன் விரும்பாத கவலைகள் மனிதனைப் பற்றிக்கொள்ளுகின்றன. குறிப்பாக இந்த கவலைகள் அடிப்படை தேவைகள் சார்ந்தவைகள் உண்ணும் உணவிற்காகவும், உடுக்கும் உடைக்காகவும் கவலைப்படுவர். இயேசு கிறிஸ்து குறிப்பிடுகையில் காகங்கள் தங்கள் உணவிற்காக கவலைப்படுவதில்லை. காட்டுப்பூக்கள் தங்கள் ஆடைக்காக கவலைப்படுவது இல்லை (லூக். 12:27) இவைகள் இறைவனில் நம்பிக்கை வைத்து வாழ்கின்றன. ஏற்ற வேளையில் இறையருளால் இவற்றின் தேவைகளை இறைவன் நிறைவு செய்கின்றார்.

கொஞ்சகால உலகில் கடவுள் நம்மையும், நம் சந்ததியையும் நடத்துவார் என்னும் நம்பிக்கையில்லாமல் நாமாகவே நமக்கும், நம் சந்ததிக்கும் சேர்த்து வைக்க விரும்பினால் நாம் சேர்த்து விடலாம் என்னும் நம்பிக்கை வீணாகும். நாம் முயன்று எதையாவது பிடித்து விடலாம் என்று நினைத்தால் சில வேளை சீடர்களின் நிலை வரலாம் (யோவா. 21:5) ஐசுவரியத்தை சேர்க்க வேண்டும் என்று விரும்பிச் சேர்த்து இதிலே நம்பிக்கை வைத்து கொண்டிருந்தால் இறையரசிற்குள் செல்வது கடினமாகும் (மாற். 10:24).

இரட்சகராகிய வாழும் கடவுள் மேல் நம்பிக்கை வைத்திருந்தால் அவர் கரங்கள் நம்மை மூடும் இருளின் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம். இம்மை வாழ்வில் கவலை நிறைந்த உலகில் கவலையின்றி வாழ்வோம்.

அருள்திரு. **A. இன்பதாஸ்**